பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 14 சனிக்கிழமை 27.03.2022 கதிர் 11

## மின்னல் தாக்கி 25 பேர் காயம்!

மாவனெல்ல பகுதியில் மின்னல் தாக்கியதில் சிறுவர்கள் உள்ளிட்ட 25 பேர் காயமடைந்துள்ளனர்.

மாவனெல்ல பெமினிவந்த பகுதியிலுள்ள மயானமொன்றிலேயே நேற்று மின்னல் தாக்கியுள்ளது

மரணச் சடங்குகள் ☞2

# கோட்டா அரசு - கூட்டமைப்பு பேச்சுகள் தொடர வேண்டும்!



### அமெரிக்காவின் விருப்பம் இது என்கிறார் ஜூலி சங்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கும், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுகள் தொடர வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். ☞2

## நிதி அமைச்சுப் பதவியை பஸிலிடமிருந்து பறிக்குக!

### முருத்தெட்டுவே ஆனந்த தேரர் அழுத்தம்



பஸில் ராஜபக்ஷவிடம் இருந்து நிதி அமைச்சைப் பறித்து, அவருக்கு வேறொரு அமைச்சுப் பதவியை வழங்க வேண்டும். ☞2

### கூட்டமைப்பினருடனான பேச்சு தொடரும்

# தமிழரின் மனதை வெல்வார் கோட்டா

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சமரசப் பேச்சை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்து முன்னெடுப்பார். இந்தப் பேச்சுகள் மூலம் தமிழ் மக்களின் மனதை ஜனாதிபதி வெல்வார்.**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் தவிசாளரும் வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.** ☞2




## ராஜபக்ஷ குடும்ப அரசுக்கு முடிவுகட்ட சந்திரிகா வியூகம்



2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து, பொதுவேட்பாளர் ஒருவரைக்களமிறக்கும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் ஈடுபட்டுள்ளார் எனத் தகவல் கசிந்துள்ளது.

சில எதிரணிகள், சிவில் அமைப்புகள் மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே இதற்கான வியூகத்தை அவர் வகுத்து வருகின்றார் எனவும், இரகசியப் பேச்சுகள்கூட இடம்பெற்று வருகின்றன எனவும் தெரியவருகின்றது.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள அரசியல் பின்புலம் கொண்ட ஒருவரையே சந்திரிகா ☞2

## சு.கவினர் முதலில் அமைச்சுப் பதவியை துறந்தால் நானும் துறப்பதற்குத் தயார்!

### மைத்திரியின் கருத்துக்கு நாமல் பதிலடி



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகி முன்னுதாரணமாக செயற்பட்டால், நானும் அமைச்சுப் பதவியை துறந்து, மொட்டு கட்சி தரப்பில் இருந்து முன்மாதிரியாகச் செயற்படத் தயார்.

- இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ☞2

## கம்மன்பிலவும் விமலும் இனவாதிகள்; அவர்களாலேயே அரசுக்கு அவப்பெயர்

### இப்படிக் குற்றஞ்சாட்டுகின்றார் பஸில்

முன்னாள் அமைச்சர்களான உதய கம்மன்பில, விமல்வீரவன்ஸ ஆகியோர் இனவாதிகள். அவர்களாலேயே அரசும் அவப்பெயரைச் சந்தித்தது.

- இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டினார்.

சில தினங்களுக்கு முன்னர் அரசின் அதிருப்திக் குழு கட்சிகளின் தலைவர்கள் மகாநாயக்க தேரர்களைச் ☞2



## கோர விபத்தில் மாணவி மரணம்

வீதி விபத்தில் 17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தியத்தலாவைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியத்தலாவ நில அளவை காரியாலயத்துக்கு முன்னால் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தியத்தலாவைப் பொலிஸார் தெரிவிக்கையில்,

மோட்டார் சைக்கிளும் நோயாளர் காவு வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த 17 வயதுடைய மாணவி, தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மாணவியே மரணமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திய 29 வயதுடைய நபர் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். ☞2

### சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை;

# சபையில் உடனடி விவாதம் வேண்டும்



### ரணில் வலியுறுத்து

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் உடனடியாக விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை குறித்தான சர்வதேச ☞2

### ராஜபக்ஷ குடும்ப .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அம்மையார் இலக்குவைத்துள்ளார் எனவும், தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெறும் வகையிலுமே அந்த நபரைச் சந்திரிகா, தெரிவுப் பட்டியலில் முன்னிலையில் வைத்துள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

2015இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவதற்கு சந்திரிகா அம்மையாரே திரைமறைவில் காய்நகர்த்தல்களை மேற்கொண்டிருந்தார்.

### கம்மன்பிலவும் விமலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்தித்தனர். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கம்மன்பில, 'விடுதலைப் புலிகள் ஆயுதத்தால் பெறமுடியாததை கூட்டமைப்பு டொலரை முன்னிறுத்தி பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது. அதனால்தான் சர்வகட்சி கூட்டத்தில் கலந்து கொண்டது' என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்கள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் கேட்ட போது,

கம்மன்பில, விமல் வீரவன்ஸ ஆகியோர் இனவாதத்தை முன்வைத்துத்தான் தமது அரசியலை நடத்தி வருகின்றார்கள். அரசுக்குள்ளிருந்தும் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டார்கள். இதனால் அரசு பெரும் அவப்பெயரைச் சந்தித்தது. தற்போது அரசுக்கு வெளியில் சென்றும் இனவாதக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள். இவர்களின் இந்தக் கருத்துக்கள் ஜனாதிபதி ஆரம்பித்துள்ள கூட்டமைப்புடனான பேச்சுக்கு எந்த விதத்திலும் தடங்கலை ஏற்படுத்தாது. அதேவேளை, தமிழ் - சிங்கள உறவிலும் பாதிப்பு ஏற்படுத்தாது.

அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளை முன்வைத்து கம்மன்பில முன்வைத்து எத்தனை நாளைக்குத்தான் அரசியலை முன்னெடுக்கப்போகின்றார்கள்? சர்வகட்சி மாநாட்டிலும், ஜனாதிபதியுடனான பேச்சிலும் கூட்டமைப்பினர் பங்கேற்றமையை வரவேற்கின்றேன். ஜனாதிபதி தலைமையிலான அரசு கூட்டமைப்புடனான பேச்சுக்களை தொடர்ந்து முன்னெடுத்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை வழங்கும் - என்றார்.

### சு.கவினர் முதலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை மேலும் குறைக்குமாறு மைத்திரிபால சிறிசேன யோசனை முன்வைத்துள்ளார். முதலில் சுதந்திரக் கட்சியின் அமைச்சு பதவியில் இருந்து விலகி, முன்னுதாரணமாக செயற்படட்டும். அதன்பின்னர் நான் பதவி துறப்பேன் - என்றார்.

### சபையில் உடனடி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாணய நிதியத்தின் அறிக்கை நேற்று முன்தினம் வெளிவந்தது. நாளை அமைச்சரவையில் அது பற்றி ஆராயப்படவுள்ளது.

இந்நிலையிலேயே நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

### கோர விபத்தில் மாணவி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பண்டாரவளை வைத்தியசாலையில் இருந்து நோயாளியை ஏற்றிக்கொண்ட காவு வண்டி தியத்தலாவை வைத்தியசாலைக்குச்சென்றுகொண்டிருக்கையில் அந்தக் காவுவண்டியை மோட்டார் சைக்கிள் முந்திச் செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நோயாளர் காவு வண்டியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன - என்றனர்.

### தமிழரின் மனதை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பந்தன் சிறந்த மூத்த அரசியல்வாதி. அவர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆரம்பித்துள்ள பேச்சை உள்நாட்டில் உள்ளவர்களும், வெளிநாட்டுத் தூதுவர்களும் வரவேற்றுள்ளனர்.

அரசியல் தீர்வு உள்ளிட்ட 5 விடயங்கள்தொடர்பில் ஜனாதிபதியும் கூட்டமைப்பினரும் திறந்த மனதுடன் பேச்சை ஆரம்பித்துள்ளனர். இது ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கும் எதிரணியினருக்குப் பேரிடியாக அமைந்துள்ளது.

கூட்டமைப்பினருடனான சமரசப் பேச்சை ஜனாதிபதி தொடர்ந்து முன்னெடுப்பார். இந்தப் பேச்சுகள் மூலம் தமிழ் மக்களின் மனதை ஜனாதிபதி வெல்வார்.

சஜித் அணியினர் என்னதான் திட்டங்கள் வகுத்தாலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அடுத்த தடவையும் கோட்டாபய ராஜபக்ஷவே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் - என்றார்.

### கோட்டா அரசு - .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ் அரசியல் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பை அமெரிக்கா வரவேற்கின்றது. இந்தச் சந்திப்புத் தொடர வேண்டும் என்று ஊக்குவிக்கின்றது' என்று அவர் பதிவிட்டுள்ளார்.

### நிதி அமைச்சுப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு அபயராம விகாரையின் பிரதான விகாராதிபதியான முருத்தெட்டுவே ஆனந்த தேரர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

பஸில் ராஜபக்ஷவுக்கு அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கலாம்.

அதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசின் நிர்வாகத்தையும் மேற்பார்வையையும் பொறுப்பேற்க வேண்டும்.

தற்போதைய நெருக்கடித் தீர்வுகாண பிரதமர் முன்வர வேண்டும் - என்றார்.

### மின்னல் தாக்கி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே மின்னல் தாக்கியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

ENGLISH CLASSES
யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும் திருத்தப்படும்.

K.Ganesh B.A . 077 7668725

சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்
Sabarimalai Sri Iyappan Traders
இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.
No. 315, Kandy Road, Kilinochchi.
Tel:- 021 228 3701, 076 307 8091


விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்
077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.
076 307 8091, 021 228 3701, 077 986 2470

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் குழப்பம் வரலாம்

**பொருளாதார நெருக்குவாரங்களினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் குறைவதாக – தளர்வதாக – தெரியவில்லை. இன்னும் இன்னும் அவை மோசமாகிக் கொண்டிருக்கின்றன. மிக மோசமான கட்டத்தை தாண்டியும் விட்டன.**

**எரிபொருள் விலை திடீர் திடீரென தொடர்ந்து உயர்கிறது. ஒரு லீற்றர் பெற்றோல் 300 ரூபா எல்லையைத் தாண்டுகின்றது. பாணின் விலை 130 ரூபா. மின்வெட்டு நேரம் வர வரக் கூடுகின்றது. எரிவாயுத் தட்டுப்பாடு எல்லை மீறுகின்றது. எரிவாயு சிலிண்டர்களோடு மக்கள் வீதியோர வரிசைகளில் விடிகாலை முதல் காத்து கிடக்கும் அவலம். அப்படித் தவம் கிடந்தும் அது கிட்டுவதாக இல்லை. போதாக்குறைக்கு வர்த்தகர்களின் பதுக்கல் வேறு. இந்த நிலையில் சாதாரண குடும்பங்கள் தாக்குப்பிடிப்பது என்பது நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை.**

**அரசுக்கு – ஆட்சிப் பீடத்துக்கு – எதிரான மக்கள் எதிர்ப்பு எல்லை மீறும் நிலையை நோக்கி போய்க் கொண்டிருக்கின்றது. அதனால் அரசு தரப்பு பிரமுகர்கள் – குறிப்பாக அமைச்சர்கள் எம்.பிக்கள் ஆடிப் போய் இருக்கின்றனர். தத்தம் தொகுதிகளுக்குப் போய் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாத பெரும் இக்கட்டு அவர்களுக்கு. மக்கள் சீற்றத்துடன் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாத நெருக்கடி. இப்படியே இந்த அதிகார பீடத்துடன் ஒட்டிக்கொண்டு இருந்தால், இனித் தங்களுக்கு அரசியல் எதிர்காலமே இல்லை என்ற யதார்த்தம் அவர்களில் பலருக்கும் புரிகின்றது. அடுத்து என்ன செய்வது என்று தெரியாத கையறு நிலையில்தான் அவர்களின் பலர் முழிக்கின்றனர்.**

**சாகும் நிலையில் நாய். செத்த பின்னர் கழன்று போவதா, சாகு முன்னரே நழுவுவதா என்ற சிக்கல் ஒட்டி இருக்கும் உண்ணிகளுக்கு. அதே நிலைமைதான் பல ஆளுங்கட்சி அரசியல்வாதிகளுக்கு. ஏற்கனவே விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில அணியைச் சேர்ந்த ஆளுங்கட்சி எம்.பிக்கள் 16 பேர் தனி அணியாக இயங்க முடிவு செய்துள்ளனர். சுசில் பிரேமஜயந்த, சந்திம வீரக்கொடி, அனுரா பிரியதர்ஷன யாப்பா மற்றும் கொவிந்து குமாரதுங்க, நிமல் லான்ஸா போன்றோரும் தனிக் குழுவாக இயங்குவது குறித்து ஆலோசித்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.**

**தவிரவும், சு.கவின் எஞ்சிய எம்.பிக்கள் உட்பட ஆளும் பங்காளி கூட்டணியில் தனி அதிருப்திக் குழுவாகச் செயற்படும் 11 கட்சிகளின் மிச்சமான எம்.பிக்களும் சேர்வார்களேயானால் இன்றைய நிலையில் ஆளும் தரப்பில் 35 முதல் 40 எம்.பிக்கள் ஆட்சித் தலைமைக்கு எதிராகத் திரளும் நிலைமை உள்ளது.**

**இதுவே 45 எம்.பிக்கள் என்ற நிலைமையை எட்டினால் இந்த அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இழப்பது தவிர்க்க முடியாததாகும். விலைவாசி உயர்வும், மக்கள் படும் கஷ்டங்களும் தீவிரமடைந்து வருகின்றமையைப் பார்க்கையில், அப்படி ஆளும் தரப்புக்குள் அதிருப்தி குழுவினரின் எண்ணிக்கை அந்த எல்லையை எட்டுவது விரைவில் நடக்கும் என்பது போலத்தான் தோன்றுகின்றது.**

**சரி. அப்படி நடந்தால் அதன் பின் என்ன? கோட்டாபயவின் அரசைக் கவிழ்ப்பதில் – அதை எதிர்ப்பதில் – ஒன்றுபடும் எம்.பிக்களிடையே அதற்கு மாற்றாக ஒரு கூட்டரசைத் தன்னும் ஏற்படுத்துவதற்கான பொது இணக்கப்பாடோ, ஐக்கியமோ, புரிந்துணர்வோ இல்லை.**

**அடுத்த பெப்ரவரிக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த சட்டத்தில் இடமே இல்லை என்ற பின்புலத்தில், தற்போதைய அரசும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து, புதிய மாற்று அரசு ஒன்றுக்கான உடன்பாடும் பிற கட்சிகளிடையே வராத நிலையும் நீடித்தால் பெரும் அரசியல் குழப்பம் உருவாகும். இப்போதைய நெருக்கடிகள் அத்தகைய பின்னணியில் மிக மிக மோசமாகும். அப்படி ஓர் அரசியல் குழப்பம் நீடித்தால் நாட்டு மக்களைப் பொறுத்தவரை 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக' விவகாரம் இன்னும் மோசமானதாக மாறும்.**

**என்ன நடக்கப் போகின்றது என்பதைப் பார்த்திருப்பதை தவிர சாதாரண பாமரனுக்கு வேறு வழி ஏதுமில்லை.**

## கிட்னியை விற்று அமைத்த வர்த்தக நிலையம் புங்குடுதீவில் நேற்றிரவு தீயில் எரிந்து நாசம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 27

புங்குடுதீவில் பிரதான வீதியிலுள்ள பலசரக்கு வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று (சனிக்கிழமை) இரவு இடம்பெற்ற தீ விபத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றதாக கடை உரிமையாளர் க.பாலசிங்கத்தின் மனைவி தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

புங்குடுதீவு - முதலாம் வட்டாரம் சந்தியடியில் எமதுப் பலசரக்கு கடை (பி.ஏ.ஸ்டோர்ஸ்) அமைந்துள்ளது.

நேற்றிரவு வழமை போலவே கடையை மூடிவிட்டு 9 மணியளவில் வீடு திரும்பியிருந்தோம்.

இந்த நிலையில், எமது கடை தீப்பற்றி எரிவதாகக் கடைக்கு எதிரே உள்ள பிரதேச சபை உப அலுவலகத்தின் காவலாளி அழைப்பை ஏற்படுத்தி எமக்குத் தெரிவித்தார்.

இதையடுத்து, கடைக்கு விரைந்து சென்று பார்த்த போது அங்கிருந்து அனைத்து பொருள்களும் மீதமின்றி தீக்கிரையாகிக் காணப்பட்டன.

தொடர்ச்சியாக காணப்பட்ட மரக்கறி கடை, தையல் கடை, பலசரக்கு கடை ஆகிய மூன்றும் முற்றாக எரிந்துள்ளன.

இதில் இரண்டு குளிர்சாதன பெட்டி, அலுமாரி உட்பட எட்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா காசுமென மொத்தமாக 12 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

எனினும், பொலிஸார் நடத்திய விசாரணையில் மின் ஒழுக்கு எதுவும் ஏற்படவில்லையென உறுதியாகத் தெரிவித்தனர்.

எனது கணவர் மிகவும் வறுமையான நிலையில் 2009 ஆம் ஆண்டு, இடம்பெயர்ந்து 20 ஆயிரம் முதலுடன் கடையை ஆரம்பித்தார்.

எனது கணவர் வறுமையின் பிடியில் சிக்கி கிட்னியை விற்று வாழ்க்கை நடத்தி முன்னேறி வந்த நிலையில், இன்று இவ்வாறு இடம்பெற்றுள்ளதென கவலை வெளியிட்டார்.

அத்துடன், தமது கடையில் சி.சி.டி.வியும் பொருத்தவில்லை எனவும் குறிப்பிட்டார்.

மேலும் தமக்கு எதிரிகள் யாரும் அல்லர் எனவும் பொலிஸார் விரைந்து இதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

## எரிவாயுவுக்காக காத்திருந்தவர்கள் மீது அநாகரிகமாக நடந்த பொலிஸ் அதிகாரி!

மட்டக்களப்பு நகர் பையினியர் வீதியில் எரிவாயுவுக்காக சனிக்கிழமை அதிகாலை 4 மணி தொடக்கம் பகல் ஒரு மணிவரை சிலிண்டர்களுடன் காத்திருந்த பொதுமக்கள் மீது பொலிஸ் அதிகாரி ஒருவர் அநாகரிகமாக நடந்துகொண்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொதுமக்கள் தெரிவித்தவை வருமாறு –

'லிற்றோ எரிவாயு மாவட்ட பிரதான முகவர்கள் தொடர்ந்து மாவட்டங்களில் உள்ள பல பிரதேசங்களுக்கு பிரதேச ரீதியாக தினமும் கொழும்பில் இருந்துவருகின்ற எரிவாயுக்களை கடைகளுக்கே அல்லது எரிவாயு முகவர்களுக்கோ வழங்காது நேரடியாக மக்களுக்கு 2 ஆயிரத்து 800 ரூபாவுக்கு விநியோகித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இன்று பைனியர் வீதியில் காலை 9 மணிக்கு எரிவாயு விநியோகிக்கப்படும் என முகவர்களால் தெரிவிக்கப்பட்ட நிலையில் ஏற்கனவே எரிவாயு பெற்றுக் கொள்ள முகவர்களால் வழங்கப்பட்ட டோக்கனுடன் ஒருபகுதியினரும் ஏற்கனவே வழங்கப்பட்ட டோக்கன் பெற்றுக் கொள்ளாத ஒரு பகுதியினருமாக எரிவாயுவை பெற்றுக் கொள்ள சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வீதியின் இருபகுதிகளில் இரண்டு வரிசையில் பெண்கள் முதியவர்கள் உட்பட வெற்றுச் சிலிண்டருடன் அதிகாலை 4 மணி தொடக்கம் காத்திருந்தனர்.

எரிவாயு முகவர்கள் எரிவாயு லொறியுடன் காலை 11 மணிக்கு அங்கு சென்று ஏற்கனவே டோக்கன் வழங்கப்பட்ட 300 பேருக்கு மாத்திரம் எரிவாயுவை விநியோகித்ததுடன் டோக்கன் பெறாது காத்திருந்தவர்களுக்கு எரிவாயு இல்லை என பொலிஸ் அதிகாரி தெரிவித்து காத்திருந்தவர்களை அங்கிருந்து செல்லுமாறு கோரி அநாகரிகமாக நடந்து கொண்டார்.

இதனையடுத்து பொலிஸார் மீது பொது மக்கள் சீற்றம் கொண்டு பொலிஸாருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் எரிவாயுவைப் பெறாது காத்திருந்து சுமார் 700 இற்கும் அதிகமான மக்களுக்கு முகவர்கள் எதிர்வரும் வியாழக்கிழமை எரிவாயுவை வழங்குவதாக அவர்களுக்கு டோக்கன் வழங்கியதையடுத்து அங்கிருந்து மக்கள் விலகிச் சென்றனர்.

## கிளிநொச்சியில் நபரொருவரை சினிமா பாணியில் வாகனத்தினால் மோதித் தள்ளியது கும்பல்!

### நபர் ஆபத்தான நிலையில்

கிளிநொச்சி – கனகபுரம் வீதியில் நபர் ஒருவரை கும்பல் ஒன்று வாகனத்தால் மோதி கொலை செய்ய முயன்ற நிலையில் பாதிக்கப்பட்டவர் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்த வாகனத்திலிருந்து காயத்துடன் காணப்பட்ட நபர் தப்பி ஓடுவதற்கு முயன்று வீதியில் குதித்து ஓடியுள்ளார்.

இரண்டுதடவைகள் முயன்று இரண்டாவது தடவை குறித்த வாகனத்தை செலுத்தி அந்த நபரை கடத்தல்காரர்கள் என்று நம்பப்படும் நபர்கள் மோதியுள்ளனர்.

சம்பவத்தால் அந்த நபர் படுகாயம் அடைந்துள்ளார். அதேவேளை வாகனமும் விபத்துக்குள்ளாகியுள்ளது. சம்பவத்தை அடுத்து வாகனத்தில் வந்த மூவரும் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரத்மலானையில் இருந்து சர்வதேச விமான சேவை 55 ஆண்டுக்கு பின்பு!

55 ஆண்டுகளுக்கு பின்னர் கொழும்பு இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தில் நேரடி அட்டவணைக்கு அமைய சர்வதேச விமான போக்குவரத்து இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், மாலைதீவில் இருந்த வந்த விமானம் இன்று காலை 8.47 மணியளவில் இரத்மலானை விமான நிலையத்தில் தரையிறங்கியது. இன்று முதல் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து பயணங்களை ஆரம்பிக்கும் விமான நிறுவனங்களிடம் அறவிடப்படும் 60 அமெரிக்க டொலர் வரியில் 30 டொலர்கள் மாத்திரமே அறவிடப்படும்.

அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த இந்தியாவுக்கான சர்வதேச விமான சேவைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கை உட்பட 60 நாடுகளுக்கு விமான சேவைகளை நடத்த அனுமதி வழங்கியுள்ளதாக இந்திய சிவில் விமான சேவை அதிகார சபை அறிவித்துள்ளது. கொவிட் தொற்று நோய் காரணமாக அனைத்து சர்வதேச விமான சேவைகளையும் இந்தியா கடந்த 2020 ஆம் ஆண்டு நிறுத்தியது.

# ரஷ்யா கைப்பற்றிய நகரை உக்ரைன் இராணுவம் மீட்டது

உக்ரைனில் கைவிடப்பட்ட செர்னோபில் அணு உலை நிலையத்தை ரஷ்ய படைகள் ஏற்கனவே கைப்பற்றின. இந்த நிலையில் அணு உலை ஊழியர்கள் தங்கி இருக்கும் நகரத்தை ரஷ்ய இராணுவம் கைப்பற்றி உள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது சிறப்பு ராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ரஷ்யா தொடங்கிய போர் இன்று 32ஆவது நாளாக நீடிக்கிறது.

ரஷ்ய படைகளுக்கு எதிராக உக்ரைன் இராணுவத்தினர் கடுமையாக போரிட்டு வருகிறார்கள். ரஷ்ய படைகள் தாக்குதல் தொடங்கிய சில நாள்களில் உக்ரைனின் சிறிய நகரங்களை கைப்பற்றியது. அதேபோல் தலைநகர் கீவ், புறநகர் பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன.

ரஷ்யா கைப்பற்றிய பகுதிகளை மீட்க உக்ரைன் இராணுவ வீரர்கள் தீவிரமாக உள்ளனர். இதில் கீவ் புறநகர் பகுதிகளில் சிலவற்றை உக்ரைன் மீட்டது. அங்கிருந்து ரஷ்ய படைகள் பின்வாங்கிச் சென்றன.

இந்தநிலையில் ரஷ்ய படையிடம் இருந்து ஒரு நகரை உக்ரைன் இராணுவம் மீட்டுள்ளது. உக்ரைனின் வடகிழக்கு நகரமான டிரோஸ்டியானெட்சை ரஷ்யா தனது படையெடுப்பின் போது முதல் நகராக கைப்பற்றி இருந்தது. அங்கு ரஷ்ய படைகளை எதிர்த்து உக்ரைன் இராணுவ வீரர்கள் சண்டையிட்டு வந்தனர்.

இந்தநிலையில் டிரோஸ்டி யானெட்ஸ் நகரை ரஷ்ய படையிடம் இருந்து மீட்டுள்ளதாக உக்ரைன் இராணுவம் அறிவித்தது. இந்த நகரம் ரஷ்ய எல்லைக்கு அருகே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உக்ரைனின் மேற்கு நகரமான லிவிவ் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 5 பேர் காயம் அடைந்தனர். இது குறித்து பிராந்திய கவர்னர் மக்சிம் கோசிட்ஸ்கி கூறும் போது, “லிவிவின் புறநகரில் சக்திவாய்ந்த குண்டு வெடிப்புகள் நிகழ்த்தப்பட்டன. இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்” என்றார்.

லிவிவ் நகர், போலந்து நாட்டு எல்லையில் இருந்து 60 கி.மீற்றர் தொலைவில் உள்ளது. போலந்துக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வந்துள்ள நிலையில் அந் நாட்டு எல்லை அருகே ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தாக்குதல் ஜோபைடனுக்கு ரஷ்யா எச்சரிக்கை விடுக்கும் வகையில் அமைந்துள்ளதாக கருதப்படுகிறது.

கடுமையான சேதத்தை சந்தித்துள்ள துறைமுக நகரமான மரியுபோலில் 90 சதவீத கட்டடங்கள் இடிந்துள்ளன. அந்த நகரில் இருந்து 1.40 லட்சம் பேர் தப்பி சென்றனர் எனவும் இன்னும் 1.70 லட்சம் மக்கள் சிக்கி இருக்கின்றனர் எனவும் மரியுபோல் நகர கவுன்ஸில் தெரிவித்துள்ளது.

உக்ரைனில் கைவிடப்பட்ட செர்னோபில் அணு உலை நிலையத்தை ரஷ்ய படைகள் ஏற்கனவே கைப்பற்றின. இந்தநிலையில் அணு உலை ஊழியர்கள் தங்கி இருக்கும் நகரத்தை ரஷ்ய இராணுவம் கைப்பற்றி



உள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

செர்னோபில் அணு உலை நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்கள் வசிக்கும் ஸ்லாட்பூச் நகரையும், நகராட்சி ஆஸ்பத்திரியையும் ரஷ்ய படைகள் ஆக்கிரமித்துள்ளன என பிராந்திய இராணுவ நிர்வாகம் தெரிவித்து இருக்கிறது.

தலைநகர் கீவ்வில் இருந்து வடக்கே 160 கி.மீற்றர் தொலைவில் இருக்கும் அந்நகரில் 25 ஆயிரம் பேர் வசித்து வருகிறார்கள்.

செர்னோபில் அணு உலை நிலையத்தை ரஷ்யா போர் தொடங்கிய பெப்ரவரி 24ஆம் திகதி அன்றே கைப்பற்றியது. அந்த அணு உலையில் ரஷ்யா நாச வேலையில் ஈடுபடலாம் என்று உக்ரைன் எச்சரிக்கை விடுத்து வருகிறது.

## அதிநவீன ஏவுகணை சோதனை;

# ஹொலிவுட் பட பாணியில் வீடியோ வெளியிட்ட வடகொரியா இராணுவம்



வடகொரியாவின் நடவடிக்கை உலக நாடுகளை அதிர்ச்சியடைய செய்துள்ள நிலையில், ஏவுகணை சோதனை நடத்தப்பட்டதை ஹொலிவுட் பட பாணியில் வீடியோவாக வடகொரியா இராணுவம் வெளியிட்டுள்ளது.

வடகொரியா கடந்த 2017ஆம் ஆண்டுக்கு பிறகு நாட்டின் மிகப்பெரிய மற்றும் நீண்ட தூரம் செல்லும் அதிநவீன ஏவுகணையை கடந்த 24ஆம் திகதி சோதித்தது. அமெரிக்கா வரை சென்று தாக்கும் வல்லமை படைத்த ‘ஹவாசோங் 17’ என்கிற இந்த ஏவுகணை அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் அன்னின் மேற்பார்வையில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கை உலக நாடுகளை அதிர்ச்சியடைய செய்துள்ள நிலையில், ஏவுகணை சோதனை நடத்தப்பட்டதை ஹொலிவுட் பட பாணியில் வீடியோவாக வடகொரியா இராணுவம் வெளியிட்டுள்ளது.

வீடியோவில் கிம் ஜாங் அன் கறுப்பு நிற உடை மற்றும் கறுப்பு நிற கண்ணாடியை அணிந்து நடந்துவர, அவருக்கு பின்னால் பிரமாண்ட ஏவுகணை இராணுவ வாகனத்தில் எடுத்து வரப்படுகிறது. பின்னர் கிம் ஜாங் அன் தனது கைக்கடிகாரத்தை பார்த்து, கவுண்டன் சொல்கிறார். அதை தொடர்ந்து ஏவுகணை நெருப்பை கக்கியபடி விண்ணை நோக்கி சீறிப்பாய்கிறது.

ஏவுகணை சோதனை வெற்றியடைந்த பிறகு கிம் ஜாங் அன் இராணுவ வீரர்களுக்கு மத்தியில் சிரித்தபடியே நடந்து வருவதுபோல் வீடியோ முடிகிறது. இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.



# 132 பயணிகளுடன் விழுந்து நொறுங்கிய சீன விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டெடுப்பு

சீனாவில் மலைப்பகுதியில் விழுந்து நொறுங்கிய விமானத்தின் இரண்டாவது கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை 132 பேருடன் குன்மிங்கில் இருந்து குவாங்சூ நகருக்குச் சென்ற போயிங் விமானம் ஒரு மலைப்பகுதியில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. அதில் இருந்த பயணிகள், விமானிகள் அனைவரும் உயிரிழந்தனர் என முறைப்படி அறிவிக்கப்பட்டுள்ளது. விமானிகளின் குரல்பதிவு அடங்கிய முதல் கறுப்புப் பெட்டி புதனன்று கண்டெடுக்கப்பட்டது. இரண்டாவது கறுப்புப் பெட்டியைத் தேடிவந்த நிலையில் இன்று கண்டெடுக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய இந்தப் பெட்டியில் உள்ள தகவல்கள் உதவும் எனக் கருதப்படுகிறது.

# பாகிஸ்தான் அரசியலில் பரபரப்பு தொடர்கிறது இம்ரான்கான் கட்சியின் 50 மந்திரிகள் மாயம்



நாடாளுமன்றம் நாளை (திங்கட்கிழமை) மீண்டும் கூடும் நிலையில், எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிச்சயம் கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் அதிகரித்து வரும் பணவீக்கத்துக்கு பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான அரசே காரணம் எனக்கூறி அவரது அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர எதிர்க்கட்சிகள் முனைப்பு காட்டி வருகின்றன.

நேற்று முன்தினம் நாடாளுமன்றம் கூடிய சில நிமிடங்களிலேயே சபாநாயகர் அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்தமையால் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வரும் எதிர்க்கட்சிகளின் முயற்சி தற்காலிமாக தோல்வியில் முடிந்தது.

ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் நாளை (திங்கட்கிழமை) மீண்டும் கூடும் நிலையில், எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிச்சயம் கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்ரான்கானின் சொந்த கட்சி உறுப்பினர்கள் சிலரே நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கக்கூடும் என்பதால் ஆட்சி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இம்ரான்கான் கட்சியைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட மந்திரிகள் கடந்த சில நாள்களாக பொதுவெளியில் தோன்றாமல் மாயமாகி உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. மாயமானவர்களில் 25 பேர் மத்திய மந்திரிகள் என்றும் மற்ற அனைவரும் மாகாண மந்திரிகள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது பாகிஸ்தான் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பெற்றோலியப் பொருள்களின் விலை உயர்வு; எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு தவறானது!

## நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம்

நாடு முழுவதும் 137 நாள்களுக்கு பிறகு கடந்த 22 ஆம் திகதி பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு விலையை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தியிருந்தன. நேற்றும் பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன.

அண்மையில் முடிவடைந்த ஐந்து மாநில சட்டசபைத் தேர்தலுக்காகவே மத்திய அரசு, பெற்றோலியப் பொருள்களின் விலையை உயர்த்தாமல் இருந்ததாகவும், தற்போது தேர்தல் முடிவடைந்ததால் பெற்றோல், டீசல் போன்றவற்றில் விலையை உயர்த்துவதில் மத்திய அரசு ஆர்வம் காட்டி வருவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

இதை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நிராகரித்துள்ளார். இது தொடர்பாக மக்களவையில் உறுப்பினர் கேள்விக்கு பதில் அளித்த அவர், எரிபொருள் விலை உயர்வு ஐந்து மாநிலங்களின் சட்டசபைத் தேர்தல்களுடன் தொடர்புடையதல்ல, என்று கூறியுள்ளார்.

உக்ரைனில் ரஷ்யா மேற்கொண்டுள்ள போர் காரணமாக, கச்சா எண்ணெய் விநியோகச் சங்கிலி முற்றிலும் சீர்குலைந்துள்ளதால், அனைத்து நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரிய நாடுகளிடையே நடைபெற்ற போரால் இந்தியாவின் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு கூறியிருந்தமையை ஏற்க முடியும் என்றால், தற்போதைய சூழ்நிலையை நாங்கள் ஏன் கூறக் கூடாது? என்றும் அவர் கேள்வி யெழுப்பினார்.

பிரதமர் மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசு, வரிகளைக் குறைத்து சமானிய மக்களின் மீதான சுமையை குறைக்கும் நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜி.எஸ்.டி. இழப்பீட்டு விவகாரத்தில் அரசியல் செய்வதையும் எதிர்க்கட்சிகள் நிறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். ஜி.எஸ்.டி. குழுவின் முடிவின்படி ஒவ்வொரு மாநிலமும் இழப்பீடு பெறுகிறது, என்றும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.



## இலவச உணவுப்பொருள் வழங்கும் திட்டம் செப்டெம்பர் மாதம் வரை நீடித்தார் மோடி



உலகம் முழுவதும் அச்சுறுத்தலை ஏற்படுத்திய கொரோனாப் பெருந்தொற்று இந்தியாவையும் பாதித்து பொருளாதார நெருக்கடி, வருவாயின்மை ஆகியவற்றால் மக்கள் அவதிப்பட்டநிலையில், பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா என்ற திட்டத்தை இந்திய மத்திய அரசு அறிமுகம் செய்தது.

இந்தத் திட்டத்தின் மூலம் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கிடைக்கும் உணவு பொருள்களுடன், ஒரு வீட்டுக்கு ஒரு மாதத்திற்கு கூடுதலாக 5 கிலோ உணவு தானியம் கிடைக்க வழி செய்யப்பட்ட இத்திட்டத்திற்கான நடைமுறைக் காலம் தொடர்ந்து நீடிக்கப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு நவம்பரில் அடுத்த 4 மாதங்களுக்கு திட்டம் நீடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன்படி, இந்த மார்ச் வரை இது அமுலில் இருக்கும்.

இந்த நிலையில், பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தினை அடுத்த 6 மாதங்களுக்கு நீடித்து இந்தியப் பிரதமர் மோடி அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## ஒடிசா உள்ளாட்சித் தேர்தலில் பிஜு ஜனதா தளம் அபார வெற்றி



ஒடிசாவில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் மற்றும் பஞ்சாயத்துத் தேர்தல் சமீபத்தில் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பதவிகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் செலவு வரம்பை தேர்தல் ஆணையம் உயர்த்தியிருந்தது.

இந்தநிலையில், ஒடிசாவில் நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் ஆளும் கட்சியான பிஜூ ஜனதா தளம் மொத்தமுள்ள 108 இடங்களில் 95 இடங்களைக் கைப்பற்றி அபார வெற்றியைப் பெற்றுள்ளது. பா.ஜ.க. 6, காங்கிரஸ் 4, சுயேச்சைகள் 3 இடங்களில் வென்றன.

இந்த வெற்றி குறித்து ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் கூறுகையில், எங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி. மக்கள் எங்கள் மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றுவோம். – என தெரிவித்துள்ளார்.

## தி.மு.கவின் அச்சுறுத்தல்களை நீதிமன்றத்தில் சந்திப்பேன் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை டுவிட்டரில் பதில்

தமிழக முதல்வரின் டுபாய் பயணம் குறித்து அவதூறாக விமர்சனம் செய்த அண்ணாமலை மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும், 100 கோடி ரூபா நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் தி.மு.க. சார்பில் வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. தி.மு.க. சார்பில் எடுக்கப்படும் சட்டப் போராட்டத்தை அவரால் தாங்க முடியாது எனவும் அக்கட்சியின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த எச்சரிக்கைக்கு தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிலளித்துள்ளார். அதில்,

100 கோடி ரூபா இழப்பீடு கேட்டு தி.மு.க. கட்சி, என் மீது, மானநஷ்ட வழக்கு நோட்டீஸ் அனுப்பி இருப்பதை அறிந்தேன். தி.மு.கவின் முதன்மை குடும்பம்தான். சாதாரண சாமானியனான என்னையும் அவர்களைப் போன்ற டுபாய் குடும்பத்துக்கு சரிசமமாக நடத்துகிறது.

நம் நாட்டின் நீதித்துறை மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. தி.மு.கவின் அச்சுறுத்தல்களை எல்லாம் நீதிமன்றத்தில் சந்திப்பேன். தமிழகத்துக்கான, என் போராட்டம் தொடரும். துணிவுடன், மக்கள் துணையுடன், என்று அண்ணாமலை பதிவிட்டுள்ளார்.

## எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து பல இடங்களில் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்




காங்கிரஸ் கட்சியின் அனைத்து மாநில பொறுப்பாளர்கள் மற்றும் தேசிய பொதுச்செயலாளர்களுடன் காங்கிரஸ் தேசிய பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் டெல்லியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களில் நிலவும் அரசியல் சூழல் மற்றும் தேசிய அளவிலான முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

இந்தக்கூட்டத்தின்போது வரும் 31ஆம் திகதி எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விலைவாசி இல்லாத பாரதம் என பெயரிடப்பட்டுள்ளது. அத்தோடு, ஏப்ரல் இரண்டாம் திகதி மாவட்ட தலைநகரங்களிலும், ஏப்ரல் ஏழாம் திகதி மாநில தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்த காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரியங்கா காந்தி, உம்மன் சாண்டி, முகுல் வாஸ்னிக், தாரிக் அன்வர், ரந்தீப் சுர்ஜிவாலா, அஜய் மாக்கன் மற்றும் கட்சியின் பொருளாளர் பவன் குமார் பன்சால் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## மன்னிப்புக் கேட்டு நஷ்ட ஈடு தரவேண்டும் அண்ணாமலைக்கு நோட்டீஸ் அனுப்பியது தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் டுபாய் பயணத்தை விமர்சித்து, தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பேசியது தி.மு.கவினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. அண்ணாமலைக்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. சார்பில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கட்சியின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பேசிய ஆர்.எஸ்.பாரதி, தமிழக வளர்ச்சிக்காக முதலமைச்சர் மேற்கொண்டுள்ள அரசு முறை டுபாய் பயணத்தைக் கொச்சைப்படுத்தும் விதமாக அண்ணாமலை அவதூறுக் கருத்து பரப்பியுள்ளார். தனது கருத்துக்கு அண்ணாமலை அடுத்த 24 மணி நேரத்தில் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும், இல்லை என்றால் அவர் மீது கிரிமினல் நடவடிக்கை மற்றும் 100 கோடி ரூபா அபராதம் கேட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அரசு முறைப் பயணத்தை சொந்த முதலீடு செய்ய பயணம் மேற்கொண்டுள்ளனர் எனக் குற்றம்சாட்டும் அண்ணாமலை, பிரதமர் மோடி 64 முறை வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட பயணத்தையும் சொந்த முதலீடு செய்வதற்கான பயணம் என்றுதான் கூறுவாரா? முதலமைச்சரை இழிவாக பேசியதற்கு கண்டனம் தெரிவித்து நோட்டீஸ் அனுப்பியுள்ளோம், அண்ணாமலை மன்னிப்பு கேட்காவிட்டால் தி.மு.க .சார்பில் எடுக்கப்படும் சட்டப் போராட்டத்தை அவரால் தாங்க முடியாது, எனவும் ஆர்.எஸ். பாரதி எச்சரித்தார்.

# சுகாதார சேவைக் குறைபாடுகளை ஒன்லைன் முறையில் முறையிடலாம்

## கல்முனை சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

(பைல் இஸ்மாயில்)

கல்முனை, மார்ச் 27

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் பொதுமக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என கல்முனை பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

பொதுமக்கள் அரச வைத்திய சேவைகளைப் பூரணமாக பெறவேண்டும் என்பது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களுக்கு எப்போதும் சிறந்த சேவையை வழங்குவதே சுகாதாரத்துறையினரின் நோக்கமாக இருக்கின்றது. அதற்காக சிறந்த நிர்வாக கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதில் ஏதாவது குறைபாடுகள் காணப்பட்டால் எமக்கு நேரடியாக அறிவிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

சுகாதார சேவைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை எங்களுக்குத் தெரிவிப்பதற்காக ஒன்லைன் QR முறையினை ஏற்படுத்தியுள்ளோம். அதன் மூலம் பொதுமக்கள் தங்களின் முறைப்பாடுகளை எங்களுக்குத் தெரிவிக்க முடியும் என கல்முனை பிராந்திய பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முறைமைகள் பற்றி விளக்கம்

## தம்பலகாமம் பிரதேச செயலகத்தில்



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகமும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும் இணைந்து நடத்திய வெளிநாடு செல்பவர்களுக்கான தொழில் சந்தை நேற்று முன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு இணங்க நடைபெற்ற தொழில் சந்தையில் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இலகுவாக செல்வதற்கான வழிமுறைகள் தொடர்பில் தெளிவூட்டப்பட்டது. போலி முகவர்களிடம் ஏமாறாமல் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஊடாக பதிவு செய்து செல்வதன் சாதகம் தொடர்பிலும் இதன் போது வளவாளராக கலந்து கொண்ட பணியகத்தின் திருகோணமலை பொறுப்பதிகாரி ஹமால் தெளிவூட்டினார்.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பணியகத்தின் மாவட்ட இணைப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வெளிநாடு செல்லவுள்ள பயனாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# போஷாக்கு, நலவாழ்வு பற்றி கல்முனையில் கருத்தரங்கு





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஏற்பாட்டில் மதத்தலைவர்கள் மற்றும் திருமண பதிவாளர்களுக்கான போஷாக்கு மற்றும் நலவாழ்வு தொடர்பிலான கருத்தரங்கொன்று இன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த கருத்தரங்கில் மதத்தலைவர்கள், திருமண பதிவாளர்கள், மருத்துவ மாதுக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இங்கு வளவாளராகக் கலந்துகொண்டு பேசிய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் திருமண பந்தங்கள் தொடர்பிலும் உணவு பழக்கவழக்கங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

நாட்டில் இப்போது வேகமாக வளர்ந்துவரும் ஆரோக்கியமற்ற – வேக ரக – உணவுகள் தொடர்பில் கருத்துரைத்த டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், அந்த உணவுகளினால் ஏற்படும் பக்கவிளைவுகள் பற்றி தெளிவுபடுத்தினார். குழந்தைகள் வளர்ப்பு, முறையற்ற உணவுப் பாவனைகளினால் இளவயது கர்ப்பிணிகள் சமகாலத்தில் அனுபவிக்கும் நோய் நிலைகள் அதற்கான தீர்வுகள் பற்றி விளக்கினார். இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வைத்தியர்கள் பலரும் கலந்துகொண்டு போஷாக்கு மற்றும் நலவாழ்வு தொடர்பில் விளக்கம் கொடுத்தனர்.



# சாய்ந்தமருதில் காசநோய் தின நடைபவனியும் வீதி நாடகமும்




(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து நடத்திய சர்வதேச காசநோய் தின விழிப்புணர்வு நடைபவனியும் வீதி நாடக நிகழ்ச்சியும் நேற்று இடம்பெற்றன.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு முன்னால் இருந்து ஆரம்பமான நடை பவனி மாளிகா வீதி ஊடாக சென்று கடற்கரைப் பிரதேசத்தை அடைந்ததுடன் அங்கு விழிப்புணர்வு நிகழ்வும் இடம்பெற்றது.

அதில் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.கே.சனூஸ், சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.எம்.நியாஸ், பல் வைத்திய நிபுணர் டாக்டர் எம்.ஐ.எம்.நௌசாட், பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம். பைசால், தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர் பி.எம்.நஸ்ருதீன், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.புஹாது உட்பட பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்

தொடர்ச்சியாக இரு வாரங்களுக்கு மேலாக இருமல் இருந்தால் காசநோய்க்காகப் பரிசோதித்துக் கொள்ளுமாறும், உடன் சளிப் பரிசோதனை செய்வதன் மூலம் காசநோயை இலகுவாக இனம்கண்டு ஆறு மாதங்களுக்குள் உரிய சிகிச்சையை வழங்கி முற்றாகக் குணமாக்க முடியும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது

# திருமலை மீனவர் வலையில் உயிருடன் சிக்கிய முதலை!



திருகோணமலை சீனக்குடா கொட்பே பிரதேசத்தில் மீனவர்களின் வலையில் உயிருடன் முதலை ஒன்று சிக்கியது.

சீனக்குடா கொட்பே பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் மீனவர்களினால் இழுக்கப்பட்ட கரை விலையிலேயே இவ்வாறு 8 அடிக்கும் அதிக நீளமான முதலை ஒன்று சிக்கிக்கொண்டது.

கரை வலை இழுக்கும்போது முதலை வலையில் மாட்டியதாகவும், பின்னர் கரைவலையின் மடிப்பகுதியில் சிக்கிய முதலையைப் பெரும் சிரமத்திற்கு மத்தியில் மீனவர்கள் உயிருடன் பிடித்துக் கயிற்றால் கட்டினர் எனவும், பின்னர் திருகோணமலை வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அது குறித்து அறிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

திருகோணமலை வனஜீவராசிகள் திணைக்களத்தில் இருந்து வருகை தந்த அதிகாரிகள் அந்த முதலையை பெரிய குளப் பிரதேசத்தில் விடுவதற்காக எடுத்துச் சென்றனர்.

இந்தக் கடற்கரைப் பிரதேசத்தில் அன்றாடம் தொடர்ச்சியாக மீன்பிடித் தொழிலில் தாங்கள் ஈடுபட்டு வரும் நிலையில் இவ்வாறு இரண்டு தடவைகள் முதலைகள் கரை வலையில் சிக்கின எனவும், இதனால் தமது வலைகள் பெரிதும் சேதமடைந்தன எனவும் மீனவர்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

# காணி ஆதாரங்களை அழித்தொழிக்கும் சதித் திட்டத்தை உடனே நிறுத்துங்கள்!

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு



கண்டி மாவட்ட தோட்ட மக்களின் காணி ஆதாரங்களை அழித்தொழிக்கும் சதி திட்டத்தை நிறுத்துங்கள் என கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் தோட்டங்களில் வாழுகின்ற மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தியது. அதன்படி, தோட்டங்களில் வாழுகின்ற ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனி வீட்டை அமைத்துக் கொள்வதற்கு குறைந்தபட்சம் ஏழு பேர்ச்சஸ் காணி வழங்கப்பட வேண்டும் என்பது அரச கொள்கையாக வகுக்கப்பட்டது. அதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து, அங்கீகாரம் பெறப்பட்டது, காணிகள் ஒதுக்கீடு செய்து, அதற்கான ஆரம்ப விடுவிப்பு பத்திரமும் வழங்கப்பட்டது. இன்று, அந்தப் பத்திரங்களைப் பறித்து, அழித்தொழிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கண்டி மாவட்ட தோட்ட மக்களின் காணி ஆதாரங்களை அழித்தொழிக்கும் இந்த சதித் திட்டத்தை நிறுத்துங்கள்.

கடந்த நல்லாட்சி காலப்பகுதியில், தோட்டங்களில் வாழுகின்ற ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனி வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு குறைந்தபட்சம் 7 பேர்ச் காணி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தோட்ட மக்கள் வாழ்கின்ற அனைத்து மாவட்டங்களிலும் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி, கண்டி, மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ள அரச பெருந்தோட்டங்களில் 8 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு காணித் துண்டுகள் பிரித்து வழங்கப்பட்டன. அதன் முதற்கட்டமாக, காணிகள் இனங்காணப்பட்டு, அளவிடப்பட்டு, உரிய அரச தோட்டங்களின் நிர்வாகத்திலிருந்து உத்தியோகபூர்வமான விடுவிப்பு ஆவணம் வழங்கப்பட்டது. அதன்படி, இனம் காணப்பட்ட குடும்பங்களுக்குக் காணித் துண்டுகள் ஒதுக்கப்பட்டன. இவ்வாறு ஒதுக்கப்பட்ட காணித் துண்டுகளில் இன்று பலரும் தனி வீடுகளை அமைத்துக் குடியேறியுள்ளனர்.

இந்தக் காணி துண்டுகள் தொடர்பாக, அரச பெருந்தோட்டங்களில் இருந்து வழங்கப்பட்ட உரித்தாவனத்தை, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் முன்வைத்து, இறுதி உறுதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். அதனைத் தற்போது ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் முன்னெடுத்திருக்க வேண்டும். மாறாக, அரச பெருந்தோட்டங்களில் இருந்து வழங்கப்பட்ட விடுவிப்பு ஆவணம் செல்லுபடியற்றது எனக் கூறி, அதனை மக்களிடம் இருந்து மீளப் பறித்து அழித்தொழிக்கும் சதித் திட்டம் நடைபெற்று வருகின்றது. இது மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கான ஆதாரத்தை அழித்தொழிக்கும் வேலை ஆகும். அது மட்டுமல்லாது, ஆவணங்களைப் பறித்துக்கொண்டு, நாம் மக்களுக்கு ஒதுக்கிய காணிகளை வேறு வேலைத் திட்டங்களுக்கு பகிர்ந்து ஒதுக்கும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கண்டி கலபொட தோட்டம், ஹந்தானை தோட்டம் மற்றும் கிரேட் வெளி தோட்டங்களில் இது நடைபெற்று வருகிறது. அன்று ஆட்சி அதிகாரம் இருந்தால் தான் அனைத்தையும் செய்யலாம் என மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்றார்கள். இன்று அந்த மக்களை இன்னுமொரு கூட்டம் ஏமாற்றி கையில் உள்ளதை பறித்துக் கொள்கின்றார்கள். ஆனால் அரச அதிகாரத்தில் உள்ளவர்களைக் காணவில்லை. இதனைத் தடுத்து நிறுத்தும் இயலுமை இல்லையா? இல்லை, இவர்களது ஒத்துழைப் போடா இது நடைபெறுகின்றது? என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றது.

புதிதாகக் காணித் துண்டுகளைப் பகிர்ந்து வழங்கும் இயலுமை இவர்களுக்கு இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், பகிர்ந்து வழங்கப்பட்ட காணிகளை மீளப் பறித்து வெளியாருக்கு கொடுப்பதற்கு துணை போவது சமூகத் துரோகமாகும். – என்றார்.

# சிற்றுண்டிகளின் விலைகளும் கட்டுமட்டில்லாமல் எகிறியது!

## பொதுமக்கள் திண்டாட்டம்

தற்போது சிற்றுண்டி உணவு வகைகள் அதிகளவு விற்பனை செய்யப்படும் நிலையில் பொருள்களின் விலைகளும் கடுமையாக அதிகரித்துள்ளன.

இதனால் சிற்றுண்டிகளின் விலைகளும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது எனஅகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

வடை மற்றும் தேநீர் என்பன அதிகளவு விற்பனை செய்யப்படும் சிற்றுண்டிச்சாலைகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் பொதுமக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தியாவசியப் பொருள்களைக் கூட கொள்வனவு செய்து கொள்ள முடியாத இக்கட்டான நிலையில் பொதுமக்கள் திணறும் பொழுது நாளுக்கு நாள் ஒவ்வொரு பொருள்களின் விலையும் அதிகரித்து வருகின்ற நிலையில் பெரும் இக்கட்டான நிலையை பொதுமக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

# பிரதமர் பதவியில் நான் தொடர்ந்தும் இருப்பேன்!

## மஹிந்த உறுதி



பிரதமர் பதவியைத் துறக்கப் போகிறேன் என வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தாம் விரைவில் பிரதமர் பதவியை ராஜினாமா செய்யப் போகிறேன் என சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தருணத்தில் பிரமதர் பதவியைத் துறக்கவோ அல்லது வேறு ஒருவரிடம் ஒப்படைக்கவோ எவ்விதத் திட்டங்களும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

தம்மை பற்றியும் அமைச்சர்கள் பற்றியும் பல்வேறு தகவல்கள் வெளியிடப்படக்கூடும் எனவும் இவை அனைத்தும் பொய்யானவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வகட்சி மாநாட்டில் முன்னாள் பிரதமர் ரணில் பங்கேற்றமை மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் அரசியலில் பழுத்த அனுபவம் உடையவர் எனவும் பிரதமர் மஹிந்த ஞாயிறு இதழ் ஒன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீர்த்தேக்கங்களில் மூழ்கி கிடந்த ஆலயங்கள் வறட்சியான காலநிலையால் மீண்டும் தோற்றம்!

கொழும்பு, மார்ச் 27

மலையகத்தில் தற்போது நிலவிவரும் வறட்சியான காலநிலையால், நீர்த்தேக்கங்களில் மூழ்கி கிடந்த பல கட்டடங்களின் அடையாளங்கள், ஆலயங்கள், தீவுகள் ஆகியன மீண்டும் தோற்றம் பெற்றுள்ளன.

இந்த வறட்சி மின்சாரத்துக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தினாலும், மேற்படி இடங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா விரும்பிகளை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

நாட்டில் நிலவிவரும் வறட்சியான காலநிலையினையடுத்து மவுசாகலை நீர்த்தேக்கத்தில் 29.7 சதவீதம் நீர் மாத்திரம் எஞ்சியிருப்பதாகவும், கொத்மலை நீர்த்தேக்கத்தில் 21.5 சதவீதமும், விக்டோரியா நீர்த்தேக்கத்தில் 33.2 சதவீதமும், ரந்தனிகலை நீர்த்தேக்கத்தில் 56.1 சதவீதமும், சமனலவெென 14.6 சதவீத நீர் மாத்திரமே எஞ்சியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

# ஆஸியில் அரச விருதை வென்ற தமிழ்ப் பெண்!



*ஆஸ்திரேலியாவில் முதல்முறையாக அரச விருதை தமிழ்ப் பெண் ஒருவர் வென்று சாதனை படைத்துள்ளார்.*

*தெற்கு ஆஸ்திரேலிய சமூகத்தின் பன்முக கலாசாரம், சமூக நல்லிணக்கம் மற்றும் கலாசாரங்களுக்கிடையேயான புரிதலை மேம்படுத்தும் ஓர் இளையவருக்கு ஆண்டுதோறும் அம்மாநிலத்தின் ஆளுநர் பல்கலாசார விருது வழங்கப்படுகிறது.*

*அந்த விருதை முதல்முறையாக இந்த ஆண்டு ஒரு தமிழர் ஒருவர் பெற்றுள்ளார்.*

*தெற்கு ஆஸ்திரேலியாவின் 2021ஆம் ஆண்டிற்கான ஆளுநர் பல்கலாசார விருதை நீலா சிவா என்ற தமிழ் பெண் பெற்றுள்ளார்.*

# டீசல் பெற்றுக்கொள்வதற்கு வந்த டிராக்டர் வாய்க்காலில் புரண்டு



கிளிநொச்சியில் டீசல் பெற்றுக்கொள்ள வந்த டிராக்டர் வாய்க்காலில் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

கிளிநொச்சி – கரடிபோக்கு சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு அதிகளவானடி ராக்டர் வருகை தந்திருந்தன.

இந்நிலையில், இந்த டிராக்டர் கட் டுப்பாட்டிலிருந்து விலகி அருகில் உள்ள நீர்ப்பா சன வாய்க்காலில் விழுந்துள்ளது.

அதனை மீட்பதற்கு விவசாயிகள் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2022இல் வெளியிடப்பெற்றது.